1967 ஜூலை 18]

(b) if so, whether they propose to work without remuneration of any kind ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. விநாயகம் : ஐயா, பதில் இல்லையென்றால், எப்பொழுது ஊதியம் வாங்கினார்கள், எப்பொழுது வாங்க முயற்சிக்கிறார்கள் என்ற விவரம் சொல்ல முடியுமா?

THE HON. THIRU C. N. ANNADURAI : The main question is : whether it is a fact that the members of the cabinet including the Hon. Chief Minister have decided not to draw any salary. The answer is 'No' which means that they may draw the salary.

THIRU K. VINAYAKAM : My question is very relevant. I am very careful in framing my question.

வாங்குவது இல்லை என்று முடிவு செய்யவில்லையென்றால் எப்பொழுது வாங்கப்போகிறார்கள்? விநாயகம் பரிந்து கேட்டால் வாங்காமல் இருப்பேன் என்று முதலமைச்சர் அவர்கள் அன்றைக்குச் சொன்னார்களே, ஞாபகம் இருக்கிறதா? இந்த மாதம் எல்லோரும் சேர்ந்து ஒன்றாக வாங்கலாமா?

THE HON. THIRU C. N. ANNADURAI : Since my hon. Friend is much interested in our drawing the salary, I am tempted to ask him why he is so much interested, because usually in official circles when one officer asks his brother officer to draw the salary, a doubt arises whether it is with a view to take a loan. Is it with that idea that the question is put ?

THIRU K. VINAYAKAM : On a point of order, Sir. During question hour it is the right of the Members to put questions to the Ministers and it is the duty of the Ministers to answer. Here I find the Chief Minister putting a question to me expecting me to answer. Is this in order ?

THE HON. THIRU C. N. ANNADURAI : My hon. Friend should know that in English grammar sometimes answers come in the form of questions.

பர்மாவிலிருந்து வந்த தமிழர்கள்

***390 வினா—திரு. வி. கே. கோதண்டராமன் :** மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

இதுவரை தமிழர்கள் எத்தனைபேர் பர்மாவிலிருந்து சென்னை மாநிலத்தில் குடியேறியுள்ளார்கள்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : 1964 ஜூலையிலிருந்து 1—6—1967 வரை பர்மாவிலிருந்து தாயகம் திரும்பி இம்மாநிலத்தில் குடியேறியவர்கள் மொத்தம் 82,755 பேர்.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், பர்மாவிலிருந்து வெளியேற்றப்பட்ட தமிழர்களைப் பொறுத்தவரையில் அவ்வளவு பேர்களும், தமிழ் நாட்டிலேயே குடியேறியிருக்கிறார்களா அல்லது வேறு எந்த

எந்த ராஜ்யங்களிலே குடியேறியிருக்கிறார்கள். அவர்களுக்கு மத்திய அரசாங்கமே வாழ்க்கைக்கு வேண்டிய பண உதவியைச் செய்கிறார்களா? அல்லது நமது ராஜ்யத்திலிருந்து உதவி செய்கிறார்களா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : பெரும்பாலானவர்கள் தமிழகத்திலே பல்வேறு பகுதிகளிலே சிறு சிறு தொழில்கள் செய்வதற்கும் சில இடங்களில் விவசாயத்திலே ஈடுபடுவதற்கும் அவர்களுக்கு வசதி செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. இதற்கு மத்திய சர்க்காரிடமிருந்து கடன் தொகை பெறப்படுகிறது. ஆனால் கனம் உறுப்பினர் அவர்கள் கேட்டதாலே மத்திய சர்க்கார் கடன் கொடுக்கின்ற நிலையில் இந்த அரசுக்குத் திருப்தி இருக்கிறதா என்பதை நானே வினாவாக எழுப்பி நானே அதற்குப் பதிலாக திருப்தி இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

DR. H. V. HANDE : A number of Burma evacuees are in great distress. In Madras City near Vyasarpadi lake many of them have been housed. During rainy season the place is marooned completely by water. We represented this to the previous Ministry, but no action was taken. Will this ministry consider the position of Burma evacuees more sympathetically and will the Minister tell us whether he has got any extra measures of relief to these poor people ?

THE HON. THIRU C. N. ANNADURAI : We have impressed upon the Central Government that the problem of rehabilitation of repatriates from Burma should be tackled in a scientific and big way just as the Central Government did with regard to East Pakistan refugees. But they have not yet taken into consideration some of the suggestions that this Government has made. Recently also, an officer of this Government attended a rehabilitation conference at Delhi and impressed upon the Central Government the need for that. As far as the plight of the Burma repatriates is concerned, I am in full sympathy with the repatriates and as far as possible this Government will try to rehabilitate them in a small manner, because this Government's financial position does not permit rehabilitation in a big way.

ஹாஜி ம. மு. பீர்முஹம்மது : பர்மா, சிலோன் போன்ற நாடுகளிலிருந்து வந்திருக்கிற அகதிகள் சிறு தொழிலுக்காகக் கடன் கேட்டு மாவட்ட கலெக்டர்களுக்கு விண்ணப்பம் செய்கிறபோழுது மிகமிகக் காலதாமதத்தோடு கவனிக்கப்படுகிறது. அவற்றையெல்லாம் துரிதமாகக் கவனித்து, அவர்களுக்குச் சீக்கிரமே பொருள் கொடுப்பதின்மூலம் அவர்களுடைய வாழ்க்கை வசதியைத் தேடிக்கொள்வதற்கு ஏற்றவகையைச் செய்து கொடுக்கிற முறையிலே இந்த அரசு உத்திரவிடுமா? அவர்களுக்குக் கொடுக்கின்ற உதவித் தொகையையும் உயர்த்திக் கொடுப்பதற்கு அரசு யோசிக்குமா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : தாமதங்களை எல்லாம் தவிர்ப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். ஆனால் அவர்களுக்கு எல்லாம் கடன் கொடுப்பதிலே சில முறைகள் வகுக்கப்பட்டிருக்கின்றன. கடனுக்காக மனுச் செய்ததும் மொத்தமாகக் கடனையெல்லாம் ஒரேயடியாகக் கொடுப்பதில்லை. ஏழ்மையும் வறுமையும் இருக்கிற நாட்டிலே தொகையை மொத்தமாகக் கொடுத்து விட்டால் அவற்றைத் தகுந்த முறையிலே செலவழிப்பார்களா மாட்டார்களா என்ற கருத்தில் அவர்கள் உள்ளபடியே தகுந்த முறையிலே செலவழிக்கத் தக்கவகையில் முதலிலே ஓரளவுக்குக் கடனும் இரண்டாவது முறையாக பாக்கிக் கடனும் இந்த விதமாகக் கொடுக்கப்படுகிறது. இதனாலே தாமதங்கள் ஏற்பட்டால் அவற்றைத் தவிர்ப்பதற்கு முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

1967 ஜூலை 18]

திரு. க. ர. நல்லசிவன் : பாகிஸ்தானாக இருந்தாலும், பர்மாவாக இருந்தாலும் அகதிகள் என்றால் எல்லோரும் இந்தியர்கள் என்ற முறையில் தமிழர்கள ஆந்திரர்கள் என்று கணக்கு வைத்துக்கொள்ளாமல் நமது அரசாங்கம் உதவிச் செய்வதை நிறுத்தி விட்டு, இந்திய அரசாங்கமே எல்லா அகதிகளுக்கும் முழுப்பொறுப்பேற்று உதவிகள் செய்யக்கூடிய வகையில் மத்திய அரசாங்கத்தை வற்புறுத்துவார்களா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : இந்த அரசு வலியுறுத்துவதைத்தான் திரு. நல்லசிவன் அவர்கள் சொல்கிறார்கள். இதை இந்த அரசு வற்புறுத்திக்கொண்டு வருகிறது.

திரு. மா. இராசாங்கம் : சென்னையிலே இருக்கிற பர்மா அகதிகளின் விடுதியை மூடிவிடுவதற்கு உத்திரவு வந்திருக்கிறதாம். அது மத்திய அரசு உத்திரவா அல்லது மாநில அரசு உத்திரவா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : தனிக் கேள்விப்போட்டால் தகவல் தெரிவிக்கப்படும்.

திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம் : பர்மா அகதிகளுக்குக் கடன் கொடுக்கும்போது 'பார்ட் பார்ட்' ஆகக் கொடுப்பதாகச் சொன்னார்கள். இதை வாங்குவதற்காக அவர்கள் வருஷக் கணக்கில் அலைந்து கொண்டிருக்கக்கூடிய நிலை இருக்கிறது. அதனால் அவர்களுக்குப் போக்கு வரத்துக் கஷ்டமாகவும், செலவுக்குக் கஷ்டமாகவும் இருக்கிறது. அதை உத்தேசித்து எந்தெந்த மாதங்களில் எத்தனை தவணைகளில் எந்தத் தேதியில் கொடுக்கப்படும் என்று அரசாங்கமே ஒரு தேதியை நிச்சயிக்க உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : இந்த அரசினுடைய வரலாறே மாதக் கணக்கைப் பொருத்தது. வருஷக் கணக்காகப் பர்மா அகதிகள் அவதிப்படுவது பற்றி அவ்வளவாகத் தெரியாது. இருக்கிற கஷ்டங்களைக் குறைக்க முயற்சி எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. மு. ச. சிவசாமி : பர்மாவில் இருந்து தமிழர்களைப் பர்மிய அரசாங்கம் சட்டாயப்படுத்தி வெளியேற்றாமல் இருக்கும்போது மத்திய சர்க்கார் 'தாய் நாட்டுக்கு வாருங்கள்; எல்லாச் சலுகைகளும் தருகிறோம் என்று ஆசை வார்த்தை சொன்னார்கள். ஆகவே, அங்கிருந்து வருகின்ற தமிழர்களின நலன் மத்திய சர்க்காரால் கவனிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : கனம் உறுப்பினர் அவர்களுடைய கருத்து பரவலாக மக்களால் நம்பப்படுகிறது.

திரு. நா. காசிராமன் : சார். 82,755 பேர் தாயகம் திரும்பியிருப்பதாகச் சொன்னார்கள். அவர்களுடைய புனர் வாழ்வுக்காகக் கடனாகவும், மானியமாகவும் தரப்பட்டிருக்கிற மொததத் தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : அந்த விவரங்கள் இல்லை.

திரு. வி. கே. கோதண்டராமன் : இவ்வாறு பர்மாவிலிருந்து வெளியேற்றப்பட்டவர்கள் கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள சொத்துக்களை விட்டு விட்டு வந்திருக்கிறார்கள். அவர்களுடைய ஏராளமான சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டு அவர்கள் மட்டும் அனுப்பப்பட்டிருக்கிறார்கள். அந்தச் சொத்தை மீண்டும் பெற்றுத் தருவதற்கு மத்திய சர்க்கார் முயற்சி எடுத்துக் கொள்ளவில்லை என்று சொன்னாலும் நமது ராஜ்ய சர்க்கார் மத்திய சர்க்காரைத் தீவிரப்படுத்தி, போராடி, அந்தச் சொத்துக்களைப் பெற்றுக் கொடுப்பதற்கான முயற்சியில் ஈடுபடுவார்களா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை : இந்தப் பிரச்சினைகள் எல்லாம் மத்திய சர்க்காரோடு போராடுவதற்காக இருப்பதாகக் கருதுவது தவறு. இந்தப் பிரச்சினைகளை மத்திய சர்க்காரிடத்தில் நிரம்ப வலியுறுத்தி வந்திருக்கிறோம். பர்மா அகதிகள் அங்கு விட்டு வந்த சொத்துக்களைத் திரும்பப் பெற்றுத் தரவேண்டுமென்பதைப் பற்றி இந்த அவையில் கூட எல்லா கட்சி உறுப்பினர்களும் ஒன்றுபட்டு உத்தியோகப் பற்றற்ற தீர்மான மாக நிறைவேற்றி இந்திய அரசுக்கு அனுப்பினுல் கூட பலன் இருக்கும்.

Police Flying Squads

*391 *Q.*—Thiru K. VINAYAKAM : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether there is any proposal to disband the Police Flying Squads for checking over-speeding by motor vehicles : and

(*b*) if so, the object of the same ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

Thiru K. VINAYAKAM : Sir, recently I have heard that Flying Squads have been disbanded and that their work has been given to the regular police. Is that a fact ?

The Hon. Thiru C. N. ANNADURAI : Sir, the hon. Member is misinformed.

திரு. நா. காசிராமன் : அதிக வேகமாகச் செல்லும் மோட்டார் வண்டிகளை செக் செய்வதற்காக உள்ள போலீஸ் பிரிவை நிறுத்திவிடப் போவதில்லை என்று சொன்னர்கள். அவர்களுக்குப் புதிய வண்டிகளை வாங்கிக் கொடுத்தால்தான் இதை நன்ருகச் செய்ய முடியும் என்ற காரணத்தால் அதற்காக அதிகப்பணம் ஒதுக்கி வண்டிகளை வாங்க சர்க்கார் முன் வருமா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை : கேள்வி இந்தப் பிரிவை எடுத்துவிட்டார்களா என்பது. " எடுக்கவில்லை " என்று பதிலளிக்கப் பட்டது. அவர்களுடைய திறமையை அதிகப்படுத்துவதற்கு வழிவகைகள் தேவைப்பட்டால் ஆலோசிக்கப்படும்.

Thiru K. VINAYAKAM : Sir, is it a fact that some reorganisation is taking place in the Police Department, with the result that some retrenchment is taking place and that some police officials have been affected by it ?

The Hon. Thiru C. N. ANNADURAI : I want my hon. Friend, Thiru Vinayakam to go to the source which has supplied him with this information and get it corrected.

State Emblem

* 392 *Q*—Thiru K. VINAYAKAM : Will the Hon the Chief Minister be pleased to state—

(*a*) under what authority and under what rules and sanctions the Government have changed the motto ' Satyameva Jayathe " in Sanskrit in the State Emblem into " Vaimaye Vellum " in Tamil ; and

(*b*) was the Legislature consulted ?